**OS.38/2024**

**நாள். 12.03.2026.**

**வா.சா. 1 – பிச்சை**

<u>2 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1ம் பிரதிவாதி என் தாயார் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் என் சகோதரர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே என் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் பாலசுந்தரமூர்த்தி என்பவருக்கு பாத்தியப்பட்டது. பாலசுந்தரமூர்த்தி வகையறாவிடமிருந்து என் தாயார் கிரையம் பெற்றார் என்றால், கிரையத்தொகையை நான்தான் செலுத்தி என் தாயார் பெயரில் கிரையம் பெற்றேன். கிரையத்தொகை எவ்வளவு என்றால் ரூ.1,05,000/– என் பெயரில் வாங்காமல் ஏன் தாயார் பெயரில் வாங்கினேன் என்றால் அவர் பெயரில் சொத்து இல்லை என்றும், அவர் பெயரில் சொத்து வாங்கித்தரும்படி கேட்டதால் வாங்கினேன். எவ்வளவு காலத்திற்கு முன்பு என் தாயார் சொன்னார் என்றால் நான் சொத்தை கிரையப்பத்திரம் பதிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு என் தாயார் அவர் பெயரில் வாங்கும்படி கேட்டார். அதற்கு முன்பாக நான் பாலசுந்தரமூர்த்தி வகையறாவிடம் தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் பத்திரம் போட்டுள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.3. கிரைய ஒப்பந்த பத்திரம் 2 ½ ஏக்கர் நிலத்திற்கு போடப்பட்டது, ஏற்கனவே நான் அடமானம் பெற்ற 2 ஏக்கர் நிலம் 1 ஏக்கர் ரூ.80 ஆயிரம் என்றும், மீதமுள்ள 61 சென்டுக்கு ஏக்கருக்கு ரூ.1 இலட்சம் வீதமும் போடப்பட்டது. 2 ஏக்கர் 61 சென்டு நிலத்திற்கு கிரைய தொகை எவ்வளவு என்றால் ரூ.2,05,000/–. நான் பாலசுந்தரமூர்த்தியிடம் 2 கிரைய ஒப்பந்தங்கள் தாவா சொத்துக்களை பொறுத்து போட்டுள்ளதாக 2 கிரைய ஒப்பந்த ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சம்மந்தமாக வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் இரண்டு கிரைய ஒப்பந்த பத்திரங்களும் வெவ்வேறு சொத்துக்களுக்கு போடப்பட்டுள்ளதால் சொல்லப்படவில்லை. கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பாலசுந்தரமூர்த்தியிடம் என் தாயார் பெயரில் கிரையப்பத்திரம் எழுதவேண்டும் என்று சொன்னேன். என் தாயார் பெயரில்

கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்த அன்று நான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். என் தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்திற்கு வாசகங்கள் நான்தான் கூறினேனா என்றால் ஆமாம். என் தாயார் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் நான் ஏற்கனவே போட்டுள்ள கிரைய ஒப்பந்த பத்திரத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான், அடமான ஆவணம் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சி வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தை படித்துப்பார்த்துவிட்டு கடனை தீர்த்தவகையில் எனக்குறிப்பிட்டுள்ளது என்றும், அந்த கடன் அடமானக்கடன் என்றும் தெரிவித்தார். பொதுவாக பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரங்கள் ஏற்பட்டிருந்தால், கிரையப்பத்திரத்தில் காண்பிக்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தில் நான் வா.சா.ஆ.2, 3 கிரைய ஒப்பந்தத்தின்படி செலுத்தியதாக சொல்லப்படும் கிரைய தொகையை அளித்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2008 ம் ஆண்டிலிருந்து என் தாயார் இறந்த 2023 ம் ஆண்டு வரை நான் என் தாயாரிடம் சொத்தை எனக்கு எழுதிக்கொடுக்கும்படி கேட்டேனா என்றால் 2021 ம் ஆண்டு கேட்டேன். என் தாயார் கிரையம் பெற்ற மொத்த சொத்தில் 1 ஏக்கர் 1 சென்டை அரசாங்கம் சாலைக்காக நிலஆர்ஜீதம் செய்துள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நிலஆர்ஜீதம் செய்யப்பட்ட இடத்திற்கு என் தாயாரின் வங்கி கணக்கில் இழப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குரிய ஆவணம் தான் வா.சா.ஆ.5. வா.சா.ஆ–5 ல் ஆர்ஜீதம் செய்யப்பட்ட சொத்து என் தாயார் பெயரிலும், அனுபவத்திலும், பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 உத்தரவை ஆட்சேபித்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாயாரிடமிருந்து நான் நிலத்தை கிரையம் எழுதி கொடுக்கும்படி கேட்டபோது எனக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் என் மனைவியின் மாமா பையன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், முதல் தகவல் அறிக்கையின் நகலை வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையில் நான்

சொத்தை என் தாயாரிடம் கேட்டதால்தான் சண்டை ஏற்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் எதிரிகள் அனைவரும் இராமநாதபுரம் கூடுதல் மகிளா நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் தெரியாது. அந்த வழக்கில் என் மனைவியின் மாமா பையன் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தைத்தான் என் தாயார் 2ம் பிரதிவாதிக்கு 21.06.2021ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு முன்பாக என் தாயார் அவர் பெயரில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசலை (வா.சா.ஆ.4) நான் எடுத்து வைத்துக்கொண்டதாக கூறி அதைப்பெற்றுத்தருமாறு இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அந்த புகாரின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையின்போது கிரையப்பத்திரத்தின் அசலை எடுத்து செல்லவில்லை என எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் எழுதிக்கொடுக்கவில்லை, ஆனால் விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் தாவா சொத்தை என் தாயார் பெயரில் நான்தான் கிரையம் பெற்றேன் என்றும், அதனால் அசல் கிரையப்பத்திரம் என்னிடம்தான் உள்ளது என கூறவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு என் தாயார் அவர் பெயரில் கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின் அசல் காணவில்லை என பேப்பரில் விளம்பரம் கொடுத்தும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் போலிசார் கண்டுபிடிக்க இயலவில்லை என கொடுத்த சான்றின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் என் தாயார் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தையும் எனது பணத்தை வைத்துக்கொண்டுதான் கிரையம் பெறப்பட்டது என இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் OS.No.131/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிராது நகல் அந்த வழக்கிற்குரியது என்றால் சரிதான். அந்த பிராது நகல் **பி.வா.சா.ஆ.1**. அந்த வழக்கில் என் தகப்பனார் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அசலை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு மூத்தவர் என்ற முறையில் என் அப்பா மற்றும் அம்மா பெயரில் கிரையம் பெற்ற

சொத்துக்களில் அசல் ஆவணங்களை எடுத்து வைத்துக்கொண்டு அவர்கள் இறந்த பின்பு சொத்துக்கள் என் பணத்தை வைத்து வாங்கப்பட்டது என்று பொய்யாக சொல்லி வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் என் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது என் தாயார் அவரது பெயரில், அவரது பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா, அம்மா இறந்தபின்பு என் தம்பியின் மேல்உள்ள பகையின் காரணமாக பொய்யான விவரங்கள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு 2, 3 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும் அவர்களை தேவையில்லாமல் இவ்வழக்கில் சேர்த்துள்ளதால் செலவுத்தொகையுடன் அவர்களுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.